இந்து தமிழ் திசை 4 CHENNAI
ஞாயிறு, ஜூலை 21, 2024

## ஜிப்மர் மருத்துவ மேற்படிப்பு ஆராய்ச்சி நிறுவனத்தில்

# 154 செவிலியர் உட்பட 209 காலி பணியிடங்கள்

### ஆகஸ்ட் 19-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்

**புதுச்சேரி**

புதுச்சேரி ஜிப்மர் முதுநிலை மருத்துவ மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில், 154 செவிலியர் அதிகாரி உட்பட 209 பணியிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளது.

அதன்படி, குரூப்-பி பதவியில் இளநிலை மொழி பெயர்ப்பு அலுவலர்-1, இளநிலை அக்குபேஷனல் தெரபிஸ்ட்-1, மருத்துவ ஆய்வக தொழில்நுட்பவியலாளர்-4, செவிலியர் அதிகாரி - 154, ஸ்பீச் பேதாலஜி - ஆடியோலஜி -1, எக்ஸ்ரே டெக்னிஷியன் (ரேடியோதெரபி) -1, எகஸ்ரே டெக்னிஷியன் (ரேடியோ டயக்னோசிஸ்) - 5, மின்னணுவியல் தொழில்நுட்ப உதவியாளர்- 2 என 169 பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

இதேபோல், குரூப்-சி பதவி நிலையில் அனஸ்தீசியா டெக்னிஷியன்-1, ஆடியோலஜி டெக்னிஷியன்-1, இளநிலை நிர்வாக உதவியாளர்- 24, மருந்தாளுநர்-6, சுவாச ஆய்வக தொழில் நுட்ப வல்லுநர்-2, ஸ்டெனோகிராபர் -1, கார்டியோகிராபிக் டெக்னிஷியன்-5 என 40 பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

இப்பணியிடங்களுக்கு 'https://www.jipmer.edu.in' என்ற ஜிப்மர் இணையதளத்தில் ஆகஸ்ட் 19-ம் தேதி மாலை 4.30 மணி வரை விண்ணப்பிக்கலாம். இந்த பதவிக்கான கல்வித் தகுதி, வயது, இடஒதுக்கீடு விவரம், விண்ணப்ப கட்டணம், விண்ணப்பிக்கும் முறை உள்ளிட்ட விவரங்களுக்கு ஜிப்மர் இணையதளத்தில் பார்க்கவும்.

இப்பணிக்கான ஆன்லைன் தேர்வு செப்டம்பர் 14-ம் தேதி நடைபெறும். இத்தேர்வில் பங்கேற்பதற்கான ஹால்-டிக்கெட்டை வருகிற செப்டம்பர் 2-ம் தேதி முதல் விண்ணப்பதாரர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மேலும், ஜிப்மர் நிர்வாக குழுவின் முடிவுப்படி, செவிலியர் அதிகாரி பதவிக்கு குறைந்தபட்சம் 80 சதவீத பணியிடங்கள் பெண் விண்ணப்பதாரர்களுக்கே ஒதுக்கப்படும். இந்த பதவிகளுக்கான பணியிடங்கள் எண்ணிக்கை தற்காலிகமானது. ஜிப்மரின் தேவைக்கேற்ப எண்ணிக்கை மாறலாம் என நிர்வாக தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன்
ஜூலை 21, 2024 ஞாயிற்றுக்கிழமை

ஜிப்மரில் 154 செவிலியர் உட்பட

# 209 பணியிடங்களுக்கு விண்ணப்பம் வரவேற்பு

## ஆகஸ்ட் 19ம் தேதி கடைசி நாள்

**புதுச்சேரி, ஜூலை 21:** புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் 154 செவிலியர் அதிகாரி உட்பட குரூப்-பி மற்றும் குரூப்-சி பிரிவில் உள்ள 209 பணியிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு விண்ணப்பிக்க ஆகஸ்ட் 19ம் தேதி கடைசி நாளாகும்.

புதுச்சேரி கோரிமேட்டில் உள்ள ஜிப்மர் மருத்துவமனையில் குரூப்-பி பிரிவில் 169, குரூப்-சி பிரிவில் 40 என 209 பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளது. இப்பணியிடங்களுக்கு தகுதியுள்ள இந்திய குடிமகன்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளது. அதன்படி, குரூப்-பி பதவியில் இளநிலை மொழிப்பெயர்ப்பு அலுவலர்-1, இளநிலை அக்குபேஷனல் தெரபிஸ்ட்-1, மருத்துவ ஆய்வக தொழில்நுட்பவியலாளர்-4, செவிலியர் அதிகாரி - 154, ஸ்பீச் பேதாலஜி & ஆடியோலஜி-1, எக்ஸ்ரே டெக்னிஷியன் (ரேடியோதெரபி)-1, எகஸ்ரே டெக்னிஷியன் (ரேடியோ டயக்னோசிஸ்)-5, மின்னணுவியல் தொழில்நுட்ப உதவியாளர்-2 என 169 பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளது. இதேபோல், குரூப்-சி அனஸ்தீசியா டெக்னிஷியன்-1, ஆடியோலஜி டெக்னிஷியன்-1, இளநிலை நிர்வாக உதவியாளர்-24, மருந்தாளுநர்-6, சுவாச ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்-2, ஸ்டெனோகிராபர் -1, கார்டியோகிரார்பிக் டெக்னிஷியன்-5 என 40 பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளது.

இப்பணியிடங்களுக்கு *https://www.jipmer.edu.in* என்ற ஜிப்மர் இணையதளத்தில் வருகிற ஆகஸ்ட் 19ம் தேதி மாலை 4.30 மணி வரை விண்ணப்பிக்கலாம். இந்த பதவிக்கான கல்வி தகுதி, வயது, இடஒதுக்கீடு விவரம், விண்ணப்ப கட்டணம், விண்ணப்பிக்கும் முறை உள்ளிட்ட விவரங்களுக்கு ஜிப்மர் இணையதளத்தில் பார்க்கவும்.

இப்பணிக்கான ஆன்லைன் தேர்வு வருகிற செப்டம்பர் 14ம் தேதி நடைபெறும். இத்தேர்வில் பங்கேற்பதற்கான ஹால்டிக்கெட்டை வருகிற செப்டம்பர் 2ம் தேதி முதல் விண்ணப்பதாரர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், ஜிப்மர் நிர்வாக குழுவின் முடிவுப்படி, செவிலியர் அதிகாரி பதவிக்கு குறைந்தபட்சம் 80 சதவீத பணியிடங்கள் பெண் விண்ணப்பதாரர்களுக்கே ஒதுக்கப்படும். இந்த பதவிகளுக்கான பணியிடங்கள் எண்ணிக்கை தற்காலிகமானது. ஜிப்மரின் தேவைக்கேற்ப எண்ணிக்கை மாறலாம் என ஜிப்மர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.